# தமிழ்நாடு எங்கும் முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவுநாள் அஞ்சலி!





காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் காஞ்சிபுரத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவுநாளை யொட்டி. மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் தலைமையில் தந்தை பெரியார் நினைவுத்தூணில் இருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டு மாவட்ட கழக அலுவலகத்தில் அமைந்திருக்கும் முழு திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன். கழக கொள்கை பரப்பு செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், சன் பிராண்டு கே ஆறுமுகம் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட பகுதிச் செயலாளர்கள். மாநகர நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.





விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம், சிந்தாமணியில் உள்ள திருவுருவச் சிலைக்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி உணவு வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக வாழப்பாடியில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் முன்பு உள்ள கலைஞர் திருஉருவச்சிலைக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி. தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை , மாவட்ட அவைத் தவைவர் முரா.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மலர்விழி ராஜா, சந்திரமோகன், குணசேகரன் மற்றும் ஒன்றிய , நகர, பேரூர் செயலாளர்கள் , சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், மேல்பட்டாம்பாக்கம் கழக அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பேரூர் கழக செயலாளர் வ.ஜெயமூர்த்தி தலைமை தாங்கினார், பொதுக்குழு உறுப்பினர் நா.பலராமன் முன்னிலை வகித்தார். ஏ.என்.பலராமன், சடாட்சரம், செல்வம் மூர்த்தி, ஜனாத்தனன் ஏழுமலை சுகுமாரன் ராஜாராம் செல்வம், குமார் சக்திவேல் கே.சுந்தரமூர்த்தி, சதாசிவம், சுந்தரமூர்த்தி, தட்சிணாமூர்த்தி கோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.






முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளையொட்டி, நாமக்கல்லில் நடைபெற்ற அமைதிப் பேரணி நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள அண்ணா சிலையில் இருந்து தொடங்கி, அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில், பரமத்தி சாலையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிலை வரை சென்றனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, நகர செயலாளர்கள் இராணா ஆர்.ஆனந்த்,, அ.சிவக்குமார், ஒன்றிய செயலாளர் வி.கே.பழனிவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.






திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி தஞ்சை மத்திய மாவட்ட மாநகர தி.மு.க சார்பில் கீழவாசல் காமராஜர் சிலையிலிருந்து முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் தலைமையில் தி.மு.க வினர் ஊர்வலமாக வந்து பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ டி.கே.ஜி.நீலமேகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாவட்டக் கழக அவைத் தலைவர் சி.இறைவன், மாநில கழக நிர்வாகிகள் எஸ்.ஜித்து, மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, கனகவள்ளி பாலாஜி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பங்கேற்றனர்.



திருப்புவனம் மேற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட கழக துணை செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன் தலைமையில் ஊர்வமாக சென்று கலைஞர் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கை மாறன். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பொற்கோ பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். ஒன்றிய நிர்வாகிகள். ஏனாதி இராமலிங்கம். கிஷோர். தகவல் தொழில் நுட்ப அணி. ராஜ்மோகன் புவனேஸ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



பண்ருட்டி நகர கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாள், அமைதிப்பேரணி நகர கழக செயலாளர், நகரமன்றத் தலைவர் க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கடலூர் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். ஆர்.எஸ்.எம். தணிக்கை செல்வம், ஆனந்தி சரவணன் ,ஆர்.ராஜா, ஆர்.கே.இராமலிங்கம் ஜி.கதிர்காமன், வழக்கறிஞ் பரணி சந்தர்,கௌரி அன்பழகன், பிரபு ,இராம்குமார் அ.ம.சங்கர், சீனிவாசன், சசிகுமார், வழக்கறிஞர் நாராயணன், இளைஞர் அணி சம்பத், விஸ்வநாதன் உள்ளிட்ட நகரக் கழக நிர்வாகிகள் ,கிளை கழக செயலாளர்கள் ,சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.